பயிர் காப்புறுதித் திட்டம்.

*6818 திரு. மா. மணிமாறன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பயிர் காப்புறுதித் திட்டம் செயல்படுத்தும் முறையில் விவசாயிகள் பயன்பெறும் அளவிற்கு மாற்றி அமைக்க அரசுக்கு வேண்டுகோள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இதுகுறித்து மைய அரசுக்கு எழுதப்பட்டு அதன் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

மலைவாழ் மக்கள் கூட்டுறவு சங்கம்.

*1998 திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பர்கூர் மலையிலும் அதன் அடிவாரத்திலும் வாழ்கின்ற 'சோழகர்' என்ற ஆதிவாசி மக்களுக்கு மலைவாழ் மக்கள் கூட்டுறவு சொஸைட்டி ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில் பர்கூர் மலையிலும், அதன் அடிவாரத்திலும் வாழ்கின்ற "சோழகர்" என்ற ஆதிவாசி மக்களுக்கு, மலைவாழ் மக்கள் கூட்டுறவு சங்கம் அமைக்க இயலாது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.